பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 08 2024 6 30
சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. சுய உதவி குழுக்களைச் சேர்ந்த 48 லட்சம் பெண்கள் பயன்பெறும் வகையில் இரண்டாயிரத்து 500 கோடி ரூபாய் சுழல் நிதியை பிரதமர் திரு நரேந்திரமோடி நாளை விடுவிக்கிறார்.
2. தமிழகத்தில் உள்ள திருக்கோவில்களை மேம்படுத்துவதற்கான திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
3. புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்தவர்களில் தகுதியுள்ள அனைவருக்கும மின்னணுகுடும்ப அட்டைகள் விரைவில் வழங்கப்படும் என்று மாநில உணவு அமைச்சர் திரு சக்கரபாணி தெரிவித்துள்ளார்.
4. பிரதமர் திரு நரேந்திரமோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.
5. சர்வதேச மற்றும் உள்ளூர் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக இந்திய கிரிக்கெட் வீரர் ஷிக்கர் தவான் அறிவித்துள்ளார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

சுய உதவி குழுக்களைச் சேர்ந்த 48 லட்சம் பெண்கள் பயன்பெறும் வகையில் இரண்டாயிரத்து 500 கோடி ரூபாய் சுழல் நிதியை பிரதமர் திரு நரேந்திரமோடி நாளை விடுவிக்கிறார்.

மேலும் 26 லட்சம் குழு உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் ஐயாயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடனுதவியையும் அவர் விடுவிக்கவுள்ளார்.

நாளை மகாராஷ்டிரா மாநிலம் **Jalgaon** நகரில் லட்சாதிபதி பெண் தொழில் முனைவோர் சம்மேளன நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இந்த நலத்திட்ட உதவிகளை பிரதமர் வழங்கவுள்ளார்.

பெண்களை லட்சாதிபதியாக்கும் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண் தொழில் முனைவோர் லட்சாதிபதிகளாக உயர்த்தப்பட்டுள்ளனர்.

மூன்று கோடி பெண்களை லட்சாதபதிகளாக உயர்த்த வேண்டுமென்ற இலக்குடன் மத்திய அரசு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

போலந்து மற்றும் உக்ரைன் நாடுகளில் பிரதமர் திரு நரேந்திரமோடி தமது பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு இன்று பிற்பகல் தில்லி திரும்பினார்.

முதலில் போலந்து நாட்டுக்கு பயணம் மேற்கொண்ட பிரதமர், வர்ஷாவில் அந்நாட்டு பிரதமர் திரு டொனால்டு டஸ்க்-ஐ சந்தித்து இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து விவாதித்தார்.

இருதரப்பு மண்டல மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான பல்வேறு விஷயங்கள் குறித்தும் இரு தலைவர்களும் பேச்சு நடத்தினர்.

நீடித்த மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு குறித்தும் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டனர்.

போலந்து பயணத்தை முடித்துக் கொண்டு உக்ரைன் சென்ற பிரதமர், அந்நாட்டு அதிபர் திரு விளாடிமிர் ஜெலன்ஸ்கியை, தமது தூதுக்குழுவினருடன் சந்தித்து பேசினார்.

கிவ் நகரில் நடைபெற்ற இந்த பேச்சுக்களின்போது உக்ரைனில் சமுதாய மேம்பாட்டு திட்டங்களை மேற்கொள்வது, விவசாயம், கலாச்சார பரிவர்த்தனை, போதைப்பொருள் தடுப்புக்கான வழிமுறைகள் உள்ளிட்டவற்றில் நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இந்தியா – உக்ரைன் இடையே கையெழுத்தானது.

உக்ரைனும் - ரஷ்யாவும் தங்களுக்கு இடையேயான போரை முடிவுக்குக் கொண்டுவர ஆக்கப்பூர்வமான வழிகளை காண வேண்டுமென்று இந்திய தரப்பில் பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தினார்.

அமைதியை நிலைநாட்டுவதற்கான அனைத்து முயற்சிகளுக்கும் இந்தியா ஆதரவளிக்கும் என்றும் திரு நரேந்திரமோடி, உக்ரைன் அதிபரிடம் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெயசங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில், நாகப்பட்டினத்தைச் சேர்ந்த 11 மீனவர்களை கைது செய்து அவர்களின் மீன்பிடி விசைப்படகுகளை இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு இதுவரை 324 மீனவர்களும், 44 படகுகளும் இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள முதலமைச்சர், இதுபோன்ற தொடர் கைது நடவடிக்கைகள் தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தை கடுமையாக பாதிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களில் இலங்கையைச் சேர்ந்த அடையாளம் தெரியாதவர்களால் தமிழக மீனவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகி இருப்பதாகவும் அவர் அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறைகளில் உள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விரைந்து விடுவிப்பதற்கு தூதரகம் மூலமாக

உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திரு மு ஸ்டாலின், அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

உலக அமைதிக்கான முயற்சிகளை பிரதமர் திரு நரேந்திரமோடி மேற்கொண்டு வருவதாக பிஜேபி மூத்த தலைவர் திருமதி தமிழிசை சௌந்தர்ராஜன் கூறியுள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் பிஜேபி உறுப்பினர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

தொடர்ந்து புதிய உறுப்பினர்களை சேர்க்கும் பணி நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

மாநிலத்தில் உள்ள தனியார் மற்றும் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் பாதுகாப்பை மாநில அரசு உறுதி செய்ய வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார்.

கோவை உட்பட தமிழகம் முழுவதிலும் உள்ள மருத்துவ மாணவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தில் பாடப்புத்தகங்களின் விலையை அரசு உயர்த்தி இருப்பது கவலை அளிப்பதாக அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

இதனை நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்கள், ளும் அஞ்சல் செய்யும்.

டி டி நியூஸ், பிரதமர் அலுவலகம், தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் ஆகியவற்றின் யூ டியூப் சேனல்களிலும் இதனை கேட்கலாம்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு எட்டு மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

இதனை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் உள்ள திருக்கோவில்களை மேம்படுத்தவும், பக்தர்களுக்கு தேவையான வசதிகளை செய்து தரவும் மாநில அரசு இந்து சமய அறநிலையத்துறை மூலம் பல திட்டங்களை செயல்படுத்தி வருவதாக முதலமைச்சா திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், பழனியில் முதல் முறையாக நடைபெறும் இரண்டு நாள் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டை காணொலி வாயிலாக அவர் இன்று தொடங்கி வைத்தார்.

திருக்கோவில் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை, ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளதாகவும், தொகுப்பூதியத்தில் பணி புரிந்து வந்த ஆயிரத்து 298 பணியாளர்களுக்கு நிரந்தர பணி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆயிரத்து 355 திருக்கோவில்களில் குடமுழுக்கு விழா அரசு சார்பில் நடத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

பழனியில் நடைபெறும் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு, தமிழகத்தின் ஆன்மீக வரலாற்றில் மிக சிறப்பான இடத்தை பெறும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

திருக்கோவில்களில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களையும் திரு மு க ஸ்டாலின் எடுத்துரைத்தார்.

*( சவுண்ட்பைட் - மு க ஸ்டாலின் ) -48--- செகண்ட்*

[]<<<>>>[]

தமிழகத்தில் புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்தவர்களில் தகுதியுள்ள அனைவருக்கும புதிய மின்னணுகுடும்ப அட்டைகள் விரைவில் வழங்கப்படும் என்று மாநில உணவு அமைச்சர் திரு சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மாநிலத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்பு இதுவரை சுமார் 16 லட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

கடந்த மார்ச் மாதத்தில் 45 ஆயிரம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டதாகத் தெரிவித்துள்ள அவர், மக்களவைத் தேர்தல் நடைபெற்றதன் காரணமாக புதிய குடும்ப அட்டை விநியோகிக்கும் பணி நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

புதிதாக அளிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் மீது தற்போது கள விசாரணை மேற்கொள்ளப்பட்டு, புதிய மின்னணு குடும்ப அட்டைகள் அச்சிடப்பட்டு வழங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

புதிய குடும்ப அட்டை வழங்குவதில் எவ்வித காலதாமதமும் ஏற்படவில்லை என்றும் திரு சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

புதுக்கோட்டையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில சட்ட அமைச்சர் திரு ரகுபதி, கால்நடை மருத்துவ ஊர்திகளை தொடங்கி வைத்ததுடன், மாற்றுத்திறனாளிகளுக்கு இருசக்கர பெட்ரோல் ஸ்கூட்டர்களையும் வழங்கினார்.

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு மக்கள் தேவையான விவரங்களை அளித்து ஒத்துழைப்பு அளிக்குமாறு ஆட்சியர் திருமதி உமா கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

நாமக்கல் கவிஞரின் நினைவு தினத்தையொட்டி, அவரது நினைவு இல்லத்தில் உள்ள சிலைக்கு பல்வேறு தரப்பினரம் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

**[]<<<>>>[]**

தேனி மாவட்டம் கம்பம் கோம்பைரோடு பகுதியில் சிறுத்தை நடமாட்டம் இருப்பதால் அப்பகுதியில் மக்கள் தேவையின்றி நடமாட வேண்டாம் என வனத்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

**[]<<<>>>[]**

அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோவிலில் ஆவணி திருவிழா இன்று கொடியேற்றத்துடன் கோலாகலமாக தொடங்கியது. முக்கிய நிகழ்வான தேரோட்டம் அடுத்த மாதம் இரண்டாம் தேதி நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

விருதுநகரில் பள்ளி மாணவ மாணவியர் பங்கேற்ற நுகர்வோர் விழிப்புணர்வு பிரச்சார பேரணி இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

மயிலாடுதுறை மாவட்டம் திருவலங்காடு பகுதியில் சிறிய வெடி தயார் செய்யும் கிடங்கு மற்றும் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மூன்று பேர் படுகாயமடைந்தனர்.

**[]<<<>>>[]**

சர்வதேச மற்றும் உள்ளூர் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக இந்திய கிரிக்கெட் வீரர் ஷிக்கர் தவான் அறிவித்துள்ளார்.

38 வயதான சிக்கர்தவான் 167 ஒருநாள் போட்டிகள், 37 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 68 டுவெண்டி – டுவெண்டி போட்டிகளில் விளையாடியுள்ளார். மொத்தம் பத்தாயிரத்து 867 ரன்களை அவர் எடுத்துள்ளார்.

சிக்கர்தவான் 15 போட்டிகளில் கேப்டனாகவும் செயல்பட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Vaishnavi Adkar** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

**[]<<<>>>[]**

சென்னையில் ஃபார்முலா-4 கார் பந்தைய போட்டியை நடத்துவதற்கான முன்னேற்பாட்டு பணிகள் குறித்து மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட, மண்டல மற்றும் மமநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க இணையதளம் மூலம் முன்பதிவு செய்வதற்கான கால அவசாகம் அடுத்த மாதம் இரண்டாம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

***End of News***